

திருச்சி ராஜியா அரபிக் கல்லூரி நடத்திய இன்ப ரமலான் நிகழ்வில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு பள்ளிக் கல்வியின் பாதுகாவலர் விருதை கல்லூரியின் தலைவர் வழங்கி கௌரவித்தார். இந்நிகழ்வில் கல்வி பணியை திறம்பட செய்யும் ஆளுமைகளுக்கு கல்விப் பணியின் காவலர் விருதை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் திருச்சி ராஜியா அரபிக் கல்லூரி நிறுவனர் மௌலானா, அல் உஸ்தாத் ஃபைஜுல் பாரி ஆலிம் பிலாலி, திருச்சி ராஜியா அரபிக் கல்லூரி தலைவர் அல்ஹாஜ், V.ராஜ் முஹம்மது, ஃபைஜீ,ராஜியா, திருச்சி ராஜியா அரபிக் கல்லூரி தலைமை ஆலோசகர்,மதனி பள்ளிவாசல் தலைமை இமாம், மௌலானா கலீஃபுத்தீன் தாவூதி மற்றும் அரபிக் கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### நிதிஷ் குமாரை பா.ஜனதா அரசு வீட்டுக்கு அனுப்பிவிட்டது!

# எடப்பாடி பழனிசாமி நிலை என்ன என்பது மக்களுக்கே தெரியும்!

## அமைச்சர் இ.பெரியசாமி தாக்கு!



திண்டுக்கல், மார்ச்.19-

தமிழகத்தில் கொல்லைப் புறமாக வந்து ஆட்சியை பிடிக்க பா.ஜனதா முயற்சி செய்கிறது என்று ஊரகவளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி கூறினார்.

ஒன்றிய அரசைக் கண்டித்து திண்டுக்கல் மாவட்டக் கழகத்தின் சார்பில் திண்டுக்கல் பேருந்து நிலையம் அருகே நடந்த ஆர்ப்பாட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி பங்கேற்றார்.

அப்போது அவர் கூறியதாவது:

**புதிய ஆட்சியை உருவாக்குவார்!**

கியாஸ் சிலிண்டர் தட்டுப் பாடு பிரச்சினைக்கு ஒன்றிய பா.ஜனதா அரசு தான் முழு பொறுப்பேற்க வேண்டும். வெளியுறவுக் கொள்கையில் மத்திய அரசு தோற்றுவிட்டது. காசா, ஈரான் மீது தாக்குதல் நடக்கும் போது மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜனதா அரசு வாய் மூடி அமைதியாக இருந்தது மக்களுக்கு எவ்வளவு பெரிய அடிப்படைபிரச்சினையை ஏற்படுத்தும் என அவர்களுக்கு தெரியவில்லை

ஒன்றிய அரசு மாநிலங்களை வஞ்சிக்கிறது, பழி வாங்குகிறது. மொத்த நாட்டையும் சுற்றி வளைத்து கைப்பற்ற நினைக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து நாட்டில் புதிய ஆட்சியை உருவாக்குவார்.

வருகிற சட்டமன்றத் தேர்தல் மற்றும் 2029ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் ஆகியவற்றில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி வாய்ப்பை இழக்கும். நாடு முழுவதும் பா.ஜனதாவினர் குறுக்கு வழியில், கொல்லைப்புறமாக வந்து ஆட்சியை பிடிக்கிறார்ள். அதை தான் தமிழகத்தில் செய்ய

முயற்சி செய்கிறார்கள். நிதி பங் கீட்டை தர மறுக்கும் பா. ஜனதா அரசையும், அதன் கொள்கையையும் எதிர்ப்பேன், உரிமையை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறுகிறார்.

தமிழகத்தின் உரிமை பறிக் கப்பட்டதற்கு நியாயமாக, முதல்அமைச்சர் கனவில் இருக்கும் எடப்பாடி பழனி சாமி தான் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும். பீகாரில் 10 முறை ஆட்சி அமைத்த நிதிஷ் குமாரை பா.ஜனதா அரசு வீட்டுக்கு அனுப்பிவிட்டது. அவரை ஒப்பிடும் போது எடப்பாடி பழனிசாமி நிலை என்ன என்பது மக்களுக்கே தெரியும்.

**தமிழ்நாட்டில் செல்லாது!**

எனவே மற்ற மாநிலங்களில் மத்திய அரசு செய்யும் ஏமாற்றுவேலை தமிழகத்தில் செல்லாது. கம்யூனிஸ்டு கட்சியினர் கூடுதல் தொகுதி கேட்பது குறித்து முதலமைச்சர் முடிவு செய்வார். தனியார் கல்லூரி நடத்தியது கருத்துக் கணிப்பு அல்ல, கருத்துத் திணிப்பு, அனைத்தும் பொய்.

இவ்வாறு அமைச்சர் இ.பெரியசாமி கூறினார்.

### கடந்த 5 ஆண்டுகளில் தமிழுக்காக

# ஒன்றிய அரசு செலவு செய்த தொகை எவ்வளவு?

## மக்களவையில் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!



புதுடெல்லி,மார்ச்.18-

**சர்வதேச அளவில் தமிழ் மொழி ஆய்வை விரிவுபடுத்துவதற்கும், ஆவணக் காப்பகங்களை உருவாக்குவதற்கும் ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்றும் தமிழ் ஆராய்ச்சிக்காக உலக மாநாடுகள் நடத்த வழங்கப்பட்ட நிதி விவரங்கள் என்ன என்றும் கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.**

அதன் விவரங்கள் பின்வருமாறு:

கடந்த ஐந்து ஆண்டுகளில், செம்மொழி தமிழின் வளர்ச்சிக்காகவும், ஆராய்ச்சிக்காகவும், உலகம் முழுவதும் பரப்பவும் ஒன்றிய அரசால் ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி எவ்வளவு? இதே விவரங்களை மற்ற செம்மொழிகளுக்கும், ஆண்டு மற்றும் திட்டம் வாரியாக தர முடியுமா?

மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் (CICT) மற்றும் பிற நிறுவனங்களுக்கு ஆராய்ச்சி செய்ய, ஓலைச் சுவடிகளை டிஜிட்டல் மயமாக்க, மொழிபெயர்ப்பு திட்டங்கள், ஆய்வு தவிகள் மற்றும் தமிழ் ஆய்வு பற்றிய உலக மாநாடுகள் நடத்துவதற்காக வழங்கப்பட்ட நிதி விவரங்கள் என்ன?

செம்மொழித் தமிழில் கல்விசார் ஆராய்ச்சி, புத்தக வெளியீடுகள், உலகளவில் பரவலாக்கல் மற்றும் உயர் கல்வி ஆகியவற்றை, இந்நிதிகள் எவ்விதம் வலுப்படுத்தியுள்ளன என்பதை மதிப்பீடு செய்ய ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

சர்வதேச அளவில் தமிழ் மொழி ஆய்வை விரிவுபடுத்துவதற்கும் ஆவணக் காப்பகங்களை உருவாக்குவதற்கும் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து செயல்படுவதற்கு ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

தமிழின் செம்மொழிப் பாரம்பரியத்தின் தொடர் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, அதற்கானநிதி உதவியையும் அதிகரிக்கநிறுவன சுயாட்சியையும் ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா?

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டு மருத்துவப் பட்டதாரிகளுக்கான CRMI இன்டர்ன்ஷிப் இடங்கள் குறைக்கப்பட்டதா?

## மக்களவையில் - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. கேள்வி



புதுடெல்லி,மார்ச்.19-

தென் சென்னை மக்களவை தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்திடம் வெளிநாட்டில் மருத்துவம் படித்த பட்டதாரிகளுக்கான கட்டாய சுழற்சி மருத்துவ பயிற்சி (CRMI) இடங்கள் குறித்து சில கேள்விகளை முன்வைத்தார்.

அதாவது, கடந்த ஒரு ஆண்டில் வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகள் (Foreign Medical Graduates - FMGs) மேற்கொள்ள வேண்டிய கட்டாய சுழற்சி மருத்துவ இன்டர்ன்ஷிப் (CRMI) இடங்கள் தேசிய மருத்துவ ஆணையத்தால் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளதா?

அப்படியானால் அதன் விவரங்கள் என்ன? மேலும், CRMI இன்டர்ன்ஷிப் இடங்களை பெறுவதில் வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகள் எதிர்கொள்ளும் சிக்கல்களை தீர்க்க மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? ஆகிய கேள்விகளை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தின் இணை அமைச்சர் அனுப்ரியா படேல் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அந்த பதிலில்:

தேசிய மருத்துவ ஆணையம் வழங்கிய தகவலின்படி, வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகள் CRMI இன்டர்ன்ஷிப் மேற்கொள்ளும் இருக்கைகளின் எண்ணிக்கை குறைக்கப்படவில்லை.

அந்த மாணவர்களுக்கான இன்டர்ன்ஷிப் நடைமுறைகள் Foreign Medical Graduate Licentiate (FMGL) Regulations, 2021 மற்றும் கட்டாய சுழற்சி மருத்துவ இன்டர்ன்ஷிப் ஒழுங்குமுறை 2021 ஆகிய விதிகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்டு ள்ளன. இந்த விதிமுறைகள் இந்திய மருத்துவ பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் பயிற்சிக்கு ஒப்பான மருத்துவ பயிற்சியை FMG மாணவர்கள் பெறுவதை உறுதி செய்யும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளன.

CRMI விதிமுறைகளின் படி, FMG மாணவர்கள் தேர்வில் தேர்ச்சி பெற்ற பிறகு இன்டர்ன்ஷிப் மேற்கொள்ள கீழ்க்கண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன:

1. புதிதாக தொடங்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகளில் முதன்மையாக பணியமர்த்தலாம்.

2. தகுதி மற்றும் மதிப்பெண் அடிப்படையில் கவுன்சலிங் அல்லது இருக்கை ஒதுக்கீட்டு முறையின் மூலம் பல்வேறு மருத்துவக் கல்லூரிகள் அல்லது நிறுவனங்களுக்கு அனுப்பப்படலாம்.

3. பழைய மருத்துவக் கல்லூரிகளில் CRMI மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட இருக்கைகளில் 7.5% வரை FMG மாணவர்களுக்கு ஒதுக்கலாம்.

4. புதிய மருத்துவக் கல்லூரிகளில் தங்களது மாணவர்கள் CRMI மேற்கொள்ளாத நிலையில் 100% இருக்கைகள் FMG மாணவர்களுக்கு வழங்கப்படலாம்.

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சொன்னதை மட்டுமல்ல; சொல்லாததையும் செய்து காட்டியவர் முதல்வர்!

# தேர்தலில் தி.மு.க. வெற்றி பெறுவது நிச்சயம்!

## திருச்சி ஆர்ப்பாட்டத்தில் கே.என்.நேரு பேச்சு!



திருச்சி, மார்ச். 19-

திருச்சியில் சிலிண்டர் தட்டுப்பாட்டை சரி செய்யாத ஒன்றிய அரசைக் கண்டித்து நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் அமைச்சர் கே. என்.நேரு பேசியதாவது:-

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று உள்ள அனைத்து கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றி..

கேஸ் சிலிண்டர் தட்டுபாட்டைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்று வருகிறது.

வருகின்ற தேர்தலில் மீண்டும் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராக பதவி ஏற்க அனைவரும் உழைக்க வேண்டும்.

மாநில அரசு தொடர்ந்து கேஸ் சிலிண்டர் தட்டுபாட்டைப் போக்கவும், மக்களின் நலனை கருத்தில் கொண்டு மத்திய அரசிடம் நமது முதல்வர் பேசிக் கொண்டு தான் இருக்கிறார்.

மக்களின் நலனில் அக்கறை காண்பிப்பது நமது முதல்வர் மட்டும் தான். ஆகையால் வருகின்ற தேர்தலில் 200க்கும் மேற்பட்ட இடங்களில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும்.

**ஒன்றிணைந்து செயல்படுவோம்!**

இந்நிலையில் யார் எதை சொன்னாலும் அவற்றை புறம் தள்ளிவிட்டு நமது வெற்றி என்ற இலக்கை நோக்கி அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம் என்றார்.

குறிப்பாக வருகின்ற தேர்தலில் திருச்சியில் கூட்டணி கட்சிகளுக்கு எந்த தொகுதியை ஒதுக்கினாலும் தி.மு.க. நிர்வாகிகள் உண்மையாக உழைத்து வெற்றி பெற வைப்போம்.

இன்றிலிருந்து 40 நாட்களுக்கு தூக்கம் இல்லாமல் உழைக்க வேண்டும். தமிழக முதல்வர் செய்த சாதனையை வீடு வீடாகச் சென்று அனைவரும் எடுத்து கூற வேண்டும் என்றார்.

தேர்தல் நேரத்தில் அனைவரும் வாக்குறுதிகளை தொடர்ந்து அறிவித்து வருகிறார்கள்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி. பழனிச்சாமி ரூபாய் 10000 தருகிறேன், உள்ளிட்ட புதிய அறிவிப்புகளை அறிவித்து வருகிறார். ஆனால் தி.மு.க. ஆட்சியில் மகளிர்க்கு ரூபாய் 1000 தரப்படும் என்று அறிவித்தபோது எப்படி சாத்தியமாகும் என்று கேள்வி எழுப்பினார்.

இந்நிலையில் இவர் அறிவித்த வாக்குறுதிகளை எப்படி சாத்தியப்படுத்துவார். ஆகையால் தேர்தல் நேரத்தில் அரசியல் கட்சிகள் புதிது புதிதாக அறிவிப்புகளை வெளியிடுவார்கள்.

தமிழகத்தில் நிலவும் கேஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டை முதல்வர் அவர்கள் தலையிட்டு தீர்க்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி கூறி வருகிறார். கூட்டணி கட்சி இடம்பெற்றுள்ள ஒன்றிய அரசிடம் பழனிச்சாமி தினமும் பேசிக் கொண்டிருக்கிறார். ஆனால் கேஸ் விநியோகம் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் விபரம் மட்டும் அவருக்கு தெரியவில்லை. தேர்தல் காலத்தில் கேஸ் என்ற பிரச்சினையை வைத்து அரசியல் செய்யலாம் என்று பழனிச்சாமி எண்ணுகிறார் ஆனால் மக்கள் பிரச்சினைக்காக களத்தில் இறங்கி போராடும் தி.மு.க. கூட்டணி இந்த பிரச்சினைக்கும் தீர்வு காண்பதற்காக தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறது.

**சொன்னதையும் சொல்லாததையும் செய்து காட்டியவர்!**

மின்சார அடுப்புகளை தேவைக்கேற்றவாறு பயன்படுத்த வேண்டும் என்பதற்காக மின் கட்டணத்தில் ரூபாய் 2 மானியத்தை உடனடியாக முதல்வர் அமல்படுத்தியுள்ளார். நமது முதல்வர் தேர்தல் அறிக்கையில் சொன்னதையும், சொல்லாததையும் செய்து காட்டியவர்.

**வெற்றி நிச்சயம்!**

நாம் எதையும் கண்டு கொள்ளாமல் கூட்டணிக் கட்சி தோழருடன் ஒன்றிணைந்து வருகின்ற தேர்தலை எதிர்கொண்டு மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைப்பதற்கும், தமிழ்நாடு முதல்வராக மு. க. ஸ்டாலின் அவர்களை பதவி ஏற்பதற்கு உழைக்க வேண்டும்.

வருகின்ற தேர்தலில் தி.மு.க. வெற்றி பெறுவது நிச்சயம் என பேசினார்..

ஆர்ப்பாட்டத்தில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன், காங்கிரஸ் கட்சி மாநிலங்களவை உறுப்பினர் கிறிஸ்டோபர் திலக், ம.தி.மு.க. மாவட்ட தலைவர் ம.தி.மு.க. வெல்லமண்டி சோமு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கவுன்சிலர் சுரேஷ், தி.மு.க. மாவட்ட துணைச் செயலாளர் முத்துசெல்வம், விஜயா, ஜெயராஜ், கருணாநிதி, டோல்கேட் சுப்பிரமணி, பொருளாளர் துரைராஜ் உட்பட கூட்டணிக் கட்சி தோழர்களும் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.



செஞ்சியில் நடைபெற்ற விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர்,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் ப.சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், டாக்டர் மாசிலாமணி,சேது நாதன், செந்தமிழ்ச் செல்வன் ,தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன்,சீனி சின்னராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

